**செய்தி வெளியீடு எண்: 391** **நாள் : 21.07.2013**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. M.C.சம்பத் அவர்களின் தகப்பனார் திரு. சின்னசாமி அவர்களின் மறைவையடுத்து, திரு. M.C. சம்பத் அவர்களுக்கு **21.7.2013** நாளிட்டு அனுப்பிய இரங்கல் கடிதத்தின் விவரம் பின்வருமாறு:-

---

"தங்களின் தகப்பனார் திரு. சின்னச்சாமி அவர்கள் இன்று அதிகாலை (21.7.2013) உடல்நலக் குறைவால் இயற்கை எய்தினார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த துயரமும், மனவேதனையும் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவத்தினால் ஈடுசெய்ய முடியாத இழப்பு தங்களுக்கு ஏற்பட்டுள்ள போதிலும், இந்தத் துயரத்தை தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தியையும், தைரியத்தையும் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தாருக்கும் அளிக்க வேண்டும் என்றும், திரு. சின்னசாமி அவர்களின் ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாறவும் எல்லாம் வல்ல இறைவனை நான் பிரார்த்திக்கிறேன்.

திரு. சின்னசாமி அவர்களை இழந்து வாடும் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.''

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9
நாள்: 21.7.2013